# நாட்டின் 13ஆவது பொதுத் தேர்தலுக்கான விண்ணப்ப ஜெபம்

வெகு காலமாய்க் காத்திருந்த பொதுத்தேர்தல் சமீபித்துவிட்டது. 222 நாடாளுமன்ற இடங்களுக்கும், அதைவிட இருமடங்கு சட்ட மன்ற இடங்களுக்கும் போட்டி நிலவ இருக்கின்றது.

ஒரு ஜனநாயக நாடான மலேசியாவில், ஜனங்கள் தங்கள் சித்தப்படி தங்கள் வாக்குகளை அளித்து அரசாங்கத்தை அமைக்கிறார்கள். எந்த ஒரு அரசாங்கத்தை தெரிந்தெடுக்கிறார்களோ அந்த அரசாங்கம் ஐந்தாண்டு காலம் நாட்டை ஆளவும், நிர்வகிக்கவும் அதிகாரம் பெறுகிறது.

ஒரு தேசத்தை ஆளும் பொறுப்பை அற்பமாய் எண்ண முடியாது. நம் நாட்டின் 28 மில்லியன் ஜனங்களின் விதியும் எதிர்காலமும் புதிதாகத் தெரிந்தெடுக்கப்படுகிற அரசாங்கத்திடமே உள்ளது. எப்படி நிர்வாகம் செய்கிறார்களோ அது நிறைவேற்றுகிற அதின் தீர்மானங்களே அந்த தேசத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றது.

எனவே மலேசியர்களும் தேவ பிள்ளைகளுமாயிருக்கிற நாம் நாம் வாக்களிக்கும் பொழுது தெளிவுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஜெபத்துடனும் சரியான வேட்பாளர்களை தெரிவு செய்வது முக்கியம் ஏனெனில் அப்பொழுதுதான் தேசத்திற்கு நன்மை கொண்டு வரும்படி அவர்கள் நிர்வாகம் பண்ண முடியும்.

இதை மனதில் கொண்டு தேர்தலுக்கென்று ஜெபிக்க சபை அழைக்கப்படுகின்றது. ஜெபக் குறிப்புகள் ஐந்து நோக்கங்களாக வகை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு நோக்கமும் தேர்தலை ஒட்டி காணப்படும்.

தயவு செய்து உங்கள் தனிப்பட்ட மற்றும் குழுத் தியானங்களில் இந்த வழிகாட்டி குறிப்புகளை பயன்படுத்துங்கள்.
திருச்சபைகளும் உங்கள் ஸ்தல சபை ஜெபக் கூட்டங்களில் அல்லது 24/7 முறைகளில் பயன்படுத்தலாம்.

## நோக்கம் 1 - திருச்சபை

1. தீபகற்பம், சபா, சரவாக் திருச்சபைகளுக்காக ஜெபி.

2. உங்கள் தொகுதிகளில் உள்ள சபைகளுக்கு ஜெபி.

3. இந்த தேசத்து ஜனங்கள் நிமித்தம் ஒரு கரிசனையும் ஒரு உத்தமமும் திருச்சபைக்கு அதிகம் காணப்பட ஜெபி.

4. ஊழல்கள் நிறைந்த தேசத்தின் நிலைக்காக சபைகள் விழித்தெழும்ப ஜெபி.

5. தேசத்தின் நன்மைகளைக் கருத்தில் கொண்டு, சரியான, நேர்மையான வேட்பாளர்கள் நிர்வாகத்திற்கு வர சபையே ஜெபி.

6. ஊழல் நிறைந்த வேட்பாளர்களை எதிர்க்கவும் நிராகரிக்கவும் சபையே ஜெபி.

7. லஞ்சமும், ஓட்டு வாங்குதலுமான பயன்பாட்டை சபை நிராகரித்து ஒதுக்க ஜெபி.

8. கிறிஸ்தவர்கள் தேர்தல் அதிகாரிகளாக, கணக்கு எண்ணுகிற அதிகாரிகளாக, தேர்தல் கண்காணிகளாக இருப்பதற்கு முன் வர ஜெபி.

## நோக்கம் 2 - வாக்காளர்கள்

1. தேவ கரம் வாக்காளர்கள் மேல் இருக்கவும், ஆர்வமற்ற மற்றும் மந்த நிலையிலிருந்து தாங்கள் பொறுப்புள்ள வாக்காளர்கள் என்பதை உணரவும் ஜெபி

2. கர்த்தருடைய கரம் உங்கள் தொகுதிகளின் வாக்காளர்கள் மேல் இருக்க ஜெபி.

3. ஊழல் மற்றும் இந்நாட்டின் கவலைக்கிடமான நிலைமைக்கு வாக்காளர்களின் கண்கள் திறக்கப்பட ஜெபி.

4. வாக்காளர்கள், ஊழலில் ஈடுபடுகிற சுயநலம் மற்றும் அகங்காரமான வேட்பாளர்களுக்கு பயப்படாமல் அவர்களை நிராகரிக்க ஜெபி.

5. வாக்காளர்கள் தைரியமாக நீதியான மற்றும் சரியான

வேட்பாளர்களுக்கு வாக்களிக்க ஜெபி.

6. வாக்காளர்கள் எல்லா விதமான வாக்கு வாங்குதல் மற்றும் லஞ்சங்களை அருவருத்து உதறித் தள்ள ஜெபி.

7. வாக்காளர்கள் எந்த தடையுமின்றி வெளிவந்து வாக்களிக்க ஜெபி.

## நோக்கம் 3- வேட்பாளர்கள்

1. போட்டியிடுகிற எல்லா வேட்பாளர்கள் மேலும் கர்த்தர் கரம் இருக்க ஜெபி.
2. உங்கள் தொகுதிகளில் போட்டியிடுகிற எல்லா வேட்பாளர்கள் மேலும் கர்த்தர் கரம் இருக்க ஜெபி.
3. ஊழல் மற்றும் சுய நலமான வேட்பாளர்கள் வெளியரங்கமாக்கப்பட்டு நிராகரிக்கப்பட ஜெபி.
4. நீதியான மற்றும் சரியான வேட்பாளர்கள் கண்டறியப்பட்டு வாக்களிக்கப்பட ஜெபி.
5. நீதியான வேட்பாளர் களின் உழைப்பு ஊழல் பண்ணுகிற வேட்பாளர் களை விட மேலோங்கி இருக்க ஜெபி.
6. நீதியான வேட்பாளர்கள் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளில் அமரவும் அப்படிப் பட்டவர்கள் நியமிக்கப்படவும் ஜெபி.

## நோக்கம் 4- தேர்தல் வழக்க முறை

1. நாடு முழுவதும் நடக்கப் போகும் தேர்தல் வழக்க முறைக்காக ஜெபி.
2. உங்கள் தொகுதிகளில் நடக்கப்போகும் தேர்தல் முறைமைக்காக ஜெபி.
3. பாதுகாப்பான, சுதந்திர தேர்தலுக்காக ஜெபி. ஒருவரும் வாக்களிக்க நிராகரிக்கப்படாமலிருக்க வும் நிர்வாகக் கோளாறி னால் ஓட்டளிக்க ஏமாற்றும் செயல் இல்லாதபடிக்கும் ஜெபி.
4. ஒரு நியாயமான தேர்தல் நடைபெற ஜெபி. தேர்தலில் நிற்கும் எல்லா வேட்பாளர் மற்றும் சார்ந்திருக்கிற கட்சிகளுக்கு பிரச்சாரம் செய்ய சம வாய்ப்பு கிடைக்க ஜெபி. ஒரு தூய்மையான தேர்தல் சுழல் காணப்படவும், ஆவி வாக்காளர்கள் மற்றும் முறையற்ற செயல்கள் இல்லாமல் இருக்கவும் ஜெபி.
5. சுத்தமான தேர்தல் நடைபெற வேண்டி லஞ்சம் மற்றும் ஊழல் வேட்பாளர்களுக்கு எதிராக தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கவும், பண வாங்கலுக்கு எல்லாரும் “முடியாது” என்று சொல்லவும் ஜெபி.
6. தேவ பயம் தேர்தல் அதிகாரிகள் மத்தியில் காணப்படவும் அவர்கள் கடுமையாக உழைக் கவும், உறுதியுடனும், நியாயமாகவும் கடமை யாற்ற ஜெபி.
7. வேட்பாளர் முகவர் களாகவும், கணக்கெடுக் கும் அதிகாரியாகவும் பணியாற்ற முன் வரும் தன்னார்வலர்களுக்காக ஜெபி. ஒவ்வொரு வாக் குச் சாவடியிலும் போது மான தன்னார்வலர்கள் முன்வரவும், அவர்கள் விழிப்புடனும், அணுக்க மாக கவனிப்பவர்களா கவும், எந்த ஊறுகளை யும் எதிர் கொள்வதற்கு துணிவுள்ளவர்களாகவும் இருக்க ஜெபி.
8. தேர்தல் கண்காணிப் பாளர்களுக்கு ஜெபி. குறிப்பாக முக்கிய வாக்குச் சாவடிகளை கவனிக்க போதுமானவர் கள் நியமிக்கப்பட ஜெபி. அவர்கள் பணியை செம் மையாய் செய்வதற்கு தேர்தல் ஆணையம் ஒத்துழைப்பு நல்க ஜெபி.

## நோக்கம் 5 - ஆட்சிக்கு வரும் அரசாங்கம்

1. ஆட்சிக்கு வரும் அரசாங் கத்தின் மீது தேவ கரம் இருக்க ஜெபி.
2. ஆட்சிக்கு வரும் அரசாங் கத்தை பிரதிநிதிக்கிற வேட்பாளர்கள் நேர்மை யும், நியாயமும் உள்ள வர்களாகவும், நாட்டின் மற்றும் குடிமக்களின் நலனை முன் வைப்பவர் களாகவும் இருக்க ஜெபி.
3. ஆட்சிக்கு வரும் அரசாங் கத்தை ஆளுபவர்கள் நாட்டின் நிர்வாகத்தை நேர்மையுடனும், யாவரும் தெளிவாகக் காணக்கூடிய அளவி லும், தாழ்மையுடனும், நியாய நீதியுடனும் ஆட்சி செய்ய ஜெபி.
4. ஆட்சிக்கு வரும் அரசாங்கம், நியாயமற்ற மற்றும் ஒடுக்குகிற சட்டங்களைக் களைய ஜெபி.
5. ஆட்சிக்கு வரும் அரசாங்கம் ஊழலையும், அதிகார துஷ்பிரயோகம் செய்பவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்க ஜெபி.
6. ஆட்சிக்கு வரும் அரசாங் கம், கூட்டரசு அரசமைப் புச் சட்டத்தை உண்மை யான உணர்வுடன் நிலை நாட்டவும், குடிமக்களின் உரிமைகளை தற்காக்கிற வர்களாகவும் இருக்க ஜெபி.

**நமது தேசத்தை
ஆசீர்வதிக்க நாம் எழும்புவோம்.**